10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 188 செவ்வாய்க்கிழமை நவம்பர் 28 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## குட்டித் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தல்

கொழும்பு, நவ.28

93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்காக வேட்பு மனுவைக் கோருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளில் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்றே தொடங்கியுள்ளது.

06





### அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும்

# மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவம்பர் 24

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை மக்கள் அலையெனத் திரண்டு அஞ்சலி செலுத்தினர். புலனாய்வாளர்கள், இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாயகம் எங்கும் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

பல வருடங்களின் பின்னர் தாயகத்தின் பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது. இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் துயிலும் இல்லங்களில் தீபம் ஏற்றி மாவீரர்களை அஞ்சலிக்க அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் அந்தத் துயிலும் இல்லங்களின் முன்பாகத் திரண்ட மக்கள் மாவீரர்களுக்கு

06

## கனகபுரம் துயிலுமில்ல புனரமைப்பை நிறுத்துக!

### ரணில் அவசர உத்தரவு

கிளிநொச்சி, நவ.28

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை மீளமைப்பதற்கான பணிகளை உடனடியாக இடைநிறுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

06

## 29 ஏக்கர் நாளை விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

வலிகாமம் வடக்கு ஒட்டகப்புலத்தில் இராணுவத்தின் வசமுள்ள 29 ஏக்கர் காணிகள் நாளை புதன்கிழமை விடுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு வல்லை - தெல்லிப்பழை - அராலி வீதியில் வயாவிளானுக்கும், அச்சுவேலிக்கும் இடைப்பட்ட பிரதேசமான ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா தேவாலயம் மற்றும் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன்

06

### தலைவரின் பிறந்தநாளால்

## முற்றியது முரண்பாடு மூடப்பட்டது வளாகம்

வவுனியா, நவ.28

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் நேற்று மாலை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை

06

## அரசியல் யாப்பு என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக சதி

### புலிகளின் பெயரால் நேற்று அறிக்கை

கொழும்பு, நவ.28

இனப் பிரச்சினைக்கான தீர்வாக புதிய அரசியல் யாப்பு என்ற வடிவத்தை நோக்கி பேரினவாத அரசு நகர்கிறது. தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் வேட்கையை நிறைவு செய்யாத, பேரினவாத சக்திகளிம் இருந்து எவ்வித பாதுகாப்பையும் தமிழருக்கு வழங்காத இந்த யாப்பை தமிழர்களின் ஆதரவோடு நிறைவேற்ற மிகப்பெரிய சதித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்து மாவீரர் நாளான நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் என்ற பெயரில் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

(அறிக்கையின் முழுவடிவம் 3,4 ஆம் பக்கங்களில்)

### இரத்ததானம் பெறாதீர்கள்!

## பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு நேற்றுச் சென்ற பொலிஸார் பெருமளவான இளைஞர்கள் இன்று இரத்த தானம் எதற்காகச் செய்கிறார்கள். மாவீரர் நாளுக்காக இரத்த தானம் செய்தால் பெறாதீர்கள் என எச்சரித்தார்கள் எனத் தெரிய வருகின்றது.

மாவீரர் நாளான நேற்று இளைஞர்கள் பலர் மாவீரர்களின் நினைவாக பல நிகழ்வுகள், உதவித் திட்டங்களை வழங்கியிருந்தனர். இதேபோன்று பல இளைஞர்கள் இரத்த வங்கியிலும், நடமாடும் சேவை மூலமாகவும் இரத்த தானம் செய்தனர்.

இந்நிலையில் நண்பகல் 12 மணியளவில் இரத்த வங்கிக்குச் சென்ற இரு பொலிஸார் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரியிடம் சுமார் 10 நிமிடம் இரத்த தானம்

06



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# தறிகெட்ட இராணுவ வாகனம் சுட்டுப் பிடித்தனர் பொலிஸார்

கொழும்பு,நவ.28

பொலிஸ் வாகனத்தை மோதி விட்டு நிறுத்தாமல் தப்பிச்சென்ற இராணுவ வாகனத்தின் மீது நேற்று இரவு 8.30 மணியளவில் பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை 10ஆம் கட்டைப் பகுதியில் இராணுவ கெப் வாகனமொன்று, பொலிஸ் கெப் வாகனத்துடன் மோதி விட்டு நிறுத்தாமல் செல்வதாக ரொட்டவெவ பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நிறுத்தாமல் பயணித்த கெப்வாகனத்தை ரொட்டவெவ பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் பொலிஸார் மறித்தனர். ஆயினும் அப்போதும் அந்த இராணுவ வாகனம் நிறுத்தாமல் செல்ல முற்பட்டது. இதன் போது குறித்த கெப் வாகனத்தின் மீது பொலிஸாரால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் இராணுவ வாகனத்தின்சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மதுபோதையில் இருந்ததாலேயே இவ்வாறு தறிகெட்டு ஓட்டினார் என்று சொல்லப்படுகின்றது. (அ)



# களத்தில் குதித்தது மகிந்தவின் கட்சி

கொழும்பு,நவ.28

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மகிந்தவின் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணிக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை, கட்சியின் தலைவர் ஜி.எல் பீரிஸ் உள்ளிட்ட கட்சியின் சில அங்கத்தவர்கள் களுத்துறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் காரியாலயத்தில் செலுத்தியுள்ளனர். பாணந்துறை, ஹொரணை, பேருவலை நகரசபைகள் மற்றும் அகலவத்த, பண்டாரகம ஆகிய பிரதேசசபைகளில் போட்டியிடுவதற்காகவே இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)



# இரு இளைஞர்கள் வாளுடன் கைது

சாவகச்சேரி,நவ.28

சாவகச்சேரி, மட்டுவில் - சிவன் கோவில் வீதியில், வாள்களுடன் மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சாவகச்சேரி பொலிஸாரின் வீதிச் சோதனையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் இன்றியே, வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். ஏதேனும் குற்றச் செயலைப் புரிவதற்காகவே அவர்கள் இவ்வாறு சென்றிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

சாவகச்சேரியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் பொலிஸ் தடுப்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. (அ)

# படுகொலை நினைவேந்தல் முல்லைத்தீவில் நேற்று



முல்லைத்தீவு,நவ.28

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சந்திப் பகுதியில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 பொது மக்களின் 27ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி இலங்கை விமானப்படையினர் மேற்கொண்ட வான் தாக்குதலில் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதன் 27ஆம் ஆண்டு நினைவெந்தலே வண்ணிக் குறோஸ் அமைப்பின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டானில் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)



# மாவீரர் நாளில் மைத்திரி பறந்தார்

கொழும்பு,நவ.28

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசுமுறைப் பயணமாக மாவீரர் நாளான நேற்று திங்கட்கிழமை தென்கொரியாவுக்குப் பயணமானார்.

தென்கொரிய அதிபரின் அழைப்பின் பேரிலேயே மைத்திரிபால சிறிசேன இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை எதிர்வரும் 29ஆம் திகதி தென்கொரிய அதிபர் மூன் ஜா-இன் சந்தித்து இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, பொருளாதார ஒத்துழைப்பு, பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம், கலாசார ஒத்துழைப்பு, உடன்பாடுகளும், முதலீட்டு ஒத்துழைப்பு, பணியாளர் அனுமதி முறை தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி தென்கொரியப் பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி நாடு திரும்பவுள்ளார். (அ)

# மரண தண்டனையை எதிர்த்த துமிந்தவின் மனு விசாரணைக்கு

கொழும்பு,நவ.28

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 5 பேர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் குறித்த மனுவை நேற்று ஆராய்ந்த போதே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதனடிப்படையில் மனு மீதான விசாரணை எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2011ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கின் இறுதித் தீர்ப்பு , கொலை நடந்து 5 வருடங்களுக்குப் பிறகு கடந்த வருடம் (2016) செப்ரெம்பர் மாதம் 08ஆம் வழங்கப்பட்டது.



இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட ஐவருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்தே துமிந்த சில்வா உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# குடிகார மருமகனை கொன்ற மாமியார்

கொழும்பு,நவ.28

தனது மகளின் கணவரான மருமகனை அடித்துக் கொன்ற மாமியார் மீரிகம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தினமும் குடித்து விட்டு வந்து தன் மனைவியையும், மனைவியின் தாயாரான மாமியாரையும் அடித்து துன்புறுத்தியுள்ளார்.

குறித்த தினத்தன்றும் நிறைவெறியில் வந்த மருமகன், வழக்கம் போல தன் கைவரிசையைக் காட்ட முனைந்தார். இதனால் வெகுண்டெழுந்த மாமியார்,கையில் அகப்பட்ட கம்பியை எடுத்து மருமகனைப் போட்டுத் தாக்கினார். இதனால் காயமடைந்த மருமகன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் உயிரிழந்தார். இதனையடுத்து மாமியார் கைது செய்யப்பட்டார். (அ)

# சாந்தபுரத்தில் அப்பளத் தொழிற்சாலை



கிளிநொச்சி, நவ.28

சாந்தபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட அப்பளத் தொழிற்சாலையினை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் திறந்து வைத்துள்ளார். இதன்போது புலம்பெயர் உறவுகளான பத்மநாதன் சிவநாதன் ஆகியோர் வழங்கிய சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்தினையும், குறித்த அப்பள நிறுவனத்தின் ஸ்தாபகரிடம் அவர் கையளித்தார். (அ)

# தேர்தல் ஒத்திவைப்புடன் எங்களுக்கு தொடர்பில்லை

கொழும்பு,நவ.28

தேர்தல் ஒத்திவைப்புக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கூட்டு எதிர்க்கட்சிக்கும் இடையில் இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இரண்டு தரப்பையும் சேர்ந்த விசேட பிரதிநிதிகளுடன் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் சில முக்கிய முடிவுகளை அடுத்த சந்திப்பில் தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டிருந்தது. அதனால் இன்றைய பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானது" எனவும் அவர் கூறியுள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 28 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# அக்கினிக் குஞ்சுகள் நர்த்தனமாடும் இனி...

நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழர் தாயகம் கார்த்திகை இருபத்தேழின் பேரொளியில் முழுதாக நனைந்தது. எத்தனை நாளைக்குத்தான் நினைவுகளின் பேரெழுகையை அதிகாரக் கரம் கொண்டு அடக்கி வைக்க முடியும். பீறிட்டு எழும் உணர்வலைகளுக்கு முன்னால், எந்தவொரு அதிகாரமும் அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் “இனி நம் வாழ்வு இருளில் தான்” என்ற நம்பிக்கையீனமும், விடுதலைக்கான போரில் தோற்றுப் போய்விட்ட வேதனையும், இனியொரு போராட்டத்துக்கான வலிமையை வழங்கியிருக்கவில்லை. எனவேதான் பேரினத்தின் சொற்கேட்டுத் தலையாட்டுவதே உயிர் வாழ்தலையாவது தக்க வைக்கும் என்ற முடிவுக்கும் நாமெல்லாம் வந்திருந்தோம். ஆனால் காலம் தான் காயத்தை ஆற்றும் அருமருந்தாயிற்றே.

அடிமனதில் தேக்கி வைத்திருந்த மாவீரக் கனவுகள் மெல்ல வெளியே உலாவரத் துடித்தன. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சிறு அடியாக மாவீரர்கள் பற்றிய நினைவுகள் ஒவ்வொரு தமிழர்களின் நெஞ்சங்களில் இருந்தும் வெளியே காலடி எடுத்து வைக்கத் தொடங்கின.

ஆயினும் மாவீரர்களின் நினைவை அணையவிடாமல், பல்கலைக்கழகம், வீடுகள் என்பவற்றில் கார்த்திகையில் தீபங்கள் இரகசியமாக ஒளிரத் தொடங்கின. அத்துடன் இருள் சூழ்ந்த அந்தக் காலத்தில் தாயகத்தில் மாவீரர் நாள் ஒளி மங்கினாலும், புலம்பெயர் தேசங்களில் இன்னும் வீரியத்தோடு சுடர் விட்டுப் பிரகாசித்தது. இப்படி ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பொறியாய் தோன்றி, இப்போது பெருந்தீயாக கொளுந்து விட்டெரியத் தொடங்கிய போது, இனியும் இதனைத் தடுத்தால் தம் கரங்களே பொசுங்கிப் போகும் என்பது அதிகாரத்துக்கு நன்கு தெரிந்து விட்டது. அதனால் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல், தாங்களாகவே அனுமதித்தது போல, மாவீரர் நாளைக் கண்டு கொள்ளாமல் இருந்தன அரசும், அதன் படைகளும்.

கடந்தவருடமும் படைகளின் பிடி கொஞ்சம் தளர்ந்தே இருந்தது. ஆனால் விட்டுப் பிடிக்கும் பொறியோ என்ற பயம், உள்ளூர மாவீரர்களை நினைவேந்தும் வேட்கை இருந்தும், பலரைத் துயிலுமில்லங்களுக்கு போகவிடாமல் செய்திருந்தது. ஆனால் அப்படி ஏதும் பொறியாக அது மாறாததால், இம்முறை வீட்டுக்குள் இருந்தவர்களையும் காலம் துயிலுமில்லங்களில் அஞ்சலி செய்ய அழைத்து வந்திருக்கிறது. அத்துடன் கடந்த வருடம், பொதுச்சுடரினை அரசியல்வாதிகள் ஏற்றியதால், சலசலப்பு ஏற்பட்டிருந்தது . எனினும் இந்த முறை மாவீரர்களின் பெற்றோரைக் கொண்டு ஏற்றப்பட்ட தீபங்களால் பழைய சர்ச்சைகளுக்கு இடமில்லாமல் போனது. இனி என்ன தடை வரினும் கார்த்திகைத் தீபம் தேசமெங்கும் தடையின்றி நர்த்தனமிடும்.

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்–அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு–தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்ரிகிட தித்தோம்.”

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”

# அரசியல் யாப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

உயர்ந்த இலட்சியத்திற்காக தமது உயிர்களைத் தியாகம்செய்யத் துணிந்த உத்தமர்களை நினைவு கொள்ளும் நாள்.

மனிதவாழ்வின் சராசரி ஆசைகளைத் துறந்து தமிழினத்தின் மீட்சிக்காக அயராதுழைத்து வீழ்ந்த புனிதர்களைப் பூசிக்கும் புனிதநாள்.

போராட்ட விழுமியங்களைப் போற்றி உயரொழுக்கக் கட்டுக்கோப்புடன் போராடி மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் விதையாகிப்போன இந்த மானமறவர்களை ஈன்றெடுத்த பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

எமது மாவீரர்கள் போர்வெறி கொண்டு படையெடுத்தவர்களுமில்லை. பொருளாசைகொண்டு போர்தொடுத்தவர்களுமில்லை. அவர்களின் போராட்டத்தில் உயரிய ஓர் இலட்சியமிருந்தது. அந்த இலட்சியத்துக்காக உயிரைக்கொடுக்கும் தியாக உணர்விருந்தது. போராட்டவழியில் ஏற்படும் அனைத்து இன்னல்களையும் எதிர்கொள்ளும் அர்ப்பணிப்பும் திடமும் இருந்தது.

எமது மாவீரர்கள் தமிழ்மக்களின் இனவிடுதலைக்காகவே போராடினார்கள். ஆண்டாண்டு காலமாய் அந்நியரால் அடக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லற்பட்ட எமது மக்களின் விடுதலைக்காகவே போராடினார்கள். எமது மக்கள் தமது மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டுமென்பதற்காகவே தமது உயிரைத் துச்சமென மதித்துப் போர் புரிந்தார்கள். எமது மக்களின் அரசியல் வேட்கையை அடையவே அவர்கள் போராடினார்கள்.

தம்மைத்தாமே நிர்வகிக்கின்ற, பாதுகாப்பான, இறைமையுள்ள, ஓர் அரசகட்டமைப்பை நிறுவுவதே எமது மக்களின் அரசியல் வேட்கையாக அமைந்திருந்தது. இந்தப் போராட்டப் பயணத்தில் ஆயுதப்போராட்ட வடிவில் அதற்குச் செயல்வடிவம் கொடுத்தவர்களே எமது மாவீரர்கள். அறவழிப்போராட்டங்கள் அனைத்தும் அடக்குமுறையாளர்கள் முன்னால் அர்த்தமற்றுப்போன பின்னர் தான் எமது மக்களிலிருந்து எழுந்து வந்த இளந்தலைமுறையொன்று ஆயுதவழி எதிர்ப்பை முன்னெடுத்தது. உலகில் நிகழ்ந்தேறிய, நிகழ்ந்து கொண்டிருக்கும் பல்வேறு விடுதலைப் போராட்டங்களைப் போலவே எமது இனவிடுதலைப் போராட்டமும் அதன் பரிணாம வளர்ச்சியில் ஆயுதப் போராட்ட வடிவத்தைக் கையிலெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. எமது விடுதலைப் போராட்டமும் முழுக்க முழுக்க நியாயமான காரணிகளின் அடிப்படையிலேயே தொடங்கப்பட்டது, நியாயமான வழியிலேயே நடாத்தப்பட்டது.

இருந்தபோதும், தமது புவிசார், பொருளாதார - அரசியல் நலன்களுக்காக எமது மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டம் உலகநாடுகள் சிலவற்றால் பந்தாடப்பட்டு, பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு, உலக வல்லரசுகளினதும் பிராந்திய ஆதிக்க சக்திகளினதும் பகடை விளையாட்டுக்கு பலிக்கடாவாகியது. ஈற்றில், மானுட வரலாற்றின் மிகப் பெரும் மனிதத் துயரோடு எமது ஆயுதவழிப் போராட்டம் நசுக்கப்பட்டது.

போர் முடிவடைந்ததாக அறிவித்த பின் இந்த எட்டாண்டுகளில் எமது மக்களின் அரசியல் வேட்கைகள் குறைந்தபட்சமேனும் நிறைவேற்றப்படவில்லை. அடிப்படை நிர்வாக முறைகளில் எமது தமிழ் மக்களுக்கான உரிமைகள் பேணப்படவில்லை. மாறாக சிங்களப் பேரினவாத அரசின் இனவழிப்பு தொடர்ந்த வண்ணமேயுள்ளது. காணிப்பறிப்புகள் தொடங்கி நிர்வாக உரிமைப்பறிப்புக்கள் வரை பேரினவாத பூதம் தமிழ்மக்களை நித்தமும் வதைத்துக்கொண்டே இருக்கின்றது.

அரசியற்கைதிகள், முன்னாட் போராளிகளின் நிலைமை துன்பத்துக்கிடமாகவே ஒவ்வொரு நாளும் நகர்கின்றது. தான் நினைத்த நேரத்தில் யாரையும் கைது செய்யலாம், எவ்வழக்கின் கீழும் தண்டிக்கலாமென்று தான்தோன்றித்தனமாகவே இயங்குகிறது அரச இயந்திரம். காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலைமை தொடர்பில் காட்டப்பட்டுவரும் மௌனத்தைப் பல்லாண்டுகளாக எதிர்கொண்டுவரும் அவர்களின் குடும்பத்தினர் ஒவ்வொருநாளும் வதைபட்டுக்கொண்டே வாழ்கின்றனர். திட்டமிட்ட வகையில் சமூகக் குற்றங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. தமிழ்மக்களின் அன்றாட வாழ்வியல் முறை சீரழியவிடப்பட்டுள்ளது. எமது மக்களின் அன்றாட வாழ்வில் படையினரின் தலையீடு எல்லாவழிகளிலும் அவர்களை அச்சுறுத்துகின்றது.

மறுபுறத்தில் எமது மக்கள் தமது உரிமைகளுக்கான போராட்டங்களைத் தொடர்ந்த வண்ணமே உள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியற்கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு என பலதரப்பட்ட தளங்களில் மக்கள் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. தங்கள் அரசியல் எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தும் விதத்தில் தமிழீழத்தில் ‘எழுக தமிழ்’ நிகழ்வுகள் மக்களால் தன்னெழுச்சியாக நிகழ்த்தப்பட்டன. ஆனால் எவற்றுக்கும் பதிலளிக்காமல், நியாயமளிக்காமல் சிறிலங்கா அரச இயந்திரம் தொடர்ந்தும் தனது இனவழிப்புச் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி வருகின்றது.

போரை முடிவுக்குக் கொண்டுவர முண்டியடித்து உதவி செய்த உலக நாடுகளோ, பரிதவித்த மக்களைக் காக்காமல் தன்வினை ஆற்றத்தவறிய ஐக்கிய நாடுகள் சபையோ இன்று வரை எமது மக்களின் இன்னல் தொடர்பில் பாராமுகமாகவே இருப்பது கவலைக்குரியது. எமது தாயகப் பகுதிகளுக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வரவுகளும், மக்களுக்கான நம்பிக்கையூட்டல்களும் வாக்குறுதிகளும் வெறும் செய்திகளாக நின்றுகொள்கின்றனவே அன்றி எமது மக்களின் இன்னல்களுக்கு எவ்வித விடிவையும் தருவதாகத் தெரியவில்லை. எமது மக்களின்மீது கரிசனை கொண்டு இயங்குவதாக நடாத்தப்படும் நாடகங்களாகவே இவை நோக்கப்படுகின்றன. பெயருக்குப் பிரேரணைகளை முன்மொழிவதும், திருத்துவதும், நிறைவேற்றுவதும் - பின் காலஅவகாசம் என்று இழுத்தடிப்பதுமாகக் காலங்கடத்தும் ஓர் உத்தியாகவும், தமக்கான அரசியல் நலன்களைப் பேண ஒரு கருவியாகவுமே ஐ.நா. சபையின் மனிதவுரிமைக் கூட்டத்தொடர் கையாளப்படுகிறது என்பதை விசனத்துடன் நாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இச்செயற்பாடுகள் நீதி மீதான எமது மக்களின் நம்பிக்கையையை நீர்த்துப்போகச் செய்கின்றன. இந்தக் கால இழுத்தடிப்பானது சிறிலங்கா அரசு தமிழின அழிப்பைத் தொடர்வதற்கான ஆசீர்வாதமாகவே நாம் கருதுகின்றோம்.

காலநீடிப்பு வழங்கப்பட்டபின்னரும்கூட சிறிலங்கா அரசதரப்பிலிருந்து எவ்வித முன்னேற்றமுமில்லை என்பதை உலகம் நன்கறியும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும் போர்க்குற்றங்கள் மீதான விசாரணை தொடர்பிலும் எள்ளளவும் முன்னகரவில்லை. அத்தோடு தமிழ்மக்கள் மீதான அடக்குமுறை, ‘நல்லாட்சி’ போன்ற புதிய வடிவங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டே வருகின்றது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுகின்றோம். காலங்காலமாக எல்லோரையும் ஏமாற்றித் தனது நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்து வந்த சிங்களப் பேரினவாத அரசு இப்போதும் அதையே தொடர்ந்தும் செய்துவருகின்றது என்பதை உலகம் நன்குணர்ந்து காத்திரமான வழியில் செயற்பட வேண்டும்.

அன்பான மக்களே!

இலங்கைத்தீவின் இனச்சிக்கலை வெறும் காணிப்பிரச்சினை, வேலைவாய்ப்புப் பிரச்சனை, தனிநபர்களின் போர்க்குற்றப் பிரச்சனை என்பதாகச் சுருக்கி, உள்நாட்டின் நிர்வாக ரீதியிலான பிரச்சினையாக வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் சிங்களப் பேரினவாத அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வாக புதிய அரசியல் யாப்பு என்ற வடிவத்தை நோக்கி பேரினவாத அரசு நகர்ந்து வந்திருக்கின்றது. தமிழ்மக்களின் அடிப்படை அரசியல் வேட்கையை நிறைவு செய்யாத, பேரினவாத சக்திகளிடமிருந்து எவ்வித பாதுகாப்பையும் தமிழருக்கு வழங்காத இந்த அரசியல் யாப்பைத் தமிழ் மக்களின் ஆதரவோடு நிறைவேற்றிவிட மிகப்பெரிய சதித்திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தமிழ்மக்களின் நியாயமான அரசியல் போராட்டத்தை நீர்த்துப் போகச்செய்யும் சிங்களப் பேரினவாத அரசின் இந்த நிகழ்ச்சி நிரலுக்கு தமிழ்த் தலைவர்கள் என்று கூறுபவர்கள் பலியாகிவிட்டனர். நெருக்கடி நிறைந்த இந்தச் சூழலில் சுயலாப அரசியல் சக்திகளையும் அரசியல் சந்தர்ப்பவாதங்களையும் இனங்காணத்தவறினால் மாபெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர்கள் ஆவோம்.

தமிழரின் தேவை என்ன என்பதை காலத்துக்குக் காலம் தமிழர்கள் தெளிவாகவே வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான தமிழரின் ஆணையைத் தொடர்ந்து, அக்கோரிக்கையை வலுவிழக்கச் செய்யவும், இனிமேல் அப்படியான கோரிக்கைகள் எழாமலிருக்கவும் அரசியல் யாப்பில் திருத்தம் செய்து அதுவரையிருந்த கருத்துச் சுதந்திரத்தையும் பறித்தது பேரினவாத அரசு. அதன்பின்வந்த காலங்களில் ஆயுதப்போராட்ட வலுவின்மூலம் பெறப்பட்ட சமனிலையின் அடிப்படையில் சிறிலங்கா அரசியல் யாப்பின் அடக்குமுறைக் கரங்களுக்கு அப்பால் நின்று விடுதலை இயக்கங்களும் அரசியற் கட்சிகளும் தமிழ்மக்களின் சார்பில் முன்வைத்த திம்புக்கோட்பாடு ஒரு வரலாற்றுப் பதிவு. அதன்பின்னரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ்மக்களின் அரசியல் வேட்கையைத் தொடர்ந்தும் சமரசமற்று வெளிப்படுத்தித்தான் வந்திருக்கிறது.

முள்ளிவாய்க்கால் பேரழிவின்பின்னர் ஏற்பட்ட சூழ்நிலையைச் சாதகமாக்கி தாங்கள் விரும்புகின்ற ஒரு நிர்வாகக் கட்டமைப்பை அரசியல் தீர்வாகக் காட்டி தமிழ் மக்களின் தலையில் கட்டிவிட சிங்கள அரசு முயற்சிக்கின்றது. இதற்கு பன்னாட்டுச் சமூகமும் தமிழ்த்தலைவர்கள் சிலரும் உடன்

(4ஆம் பக்கம் பார்க்க)


## இன்று நாளும் கோளும்

28.11.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 12 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| நவமி பகல் 06.37 மணி வரை | பூரட்டாதி பகல் 01.26 மணி வரை | அமிர்தயோகம் |
| இராகுகாலம் 3.00 – 04.30 | சுபநேரம் 07.45 – 08.45 | எமகண்டம் 09.00 – 10.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாந்தம் | சிரமம் | களிப்பு | உயர்வு | பகை | வரவு | ஆர்வம் | பாசம் | கவனம் | யோகம் | உழைப்பு | பணிவு |





சாட்டி




முள்ளியவளை



பாஷையூர்





மன்னார்

# அரசியல் யாப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைத்தீவில் நிகழ்ந்த இத்தனை அழிவுகளுக்கும் மூலகாரணமான சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனையை வலுப்படுத்தும் நோக்கில் வரையப்பட்டுக் கொண்டிருக்கும் தற்போதைய யாப்பை தமிழரின் ஆதரவுடனேயே வெற்றிபெற வைக்கும் சூட்சும விளையாட்டையே இன்றைய பேரினவாத அரசு முன்னெடுக்கின்றது. இந்த யாப்பில் தமிழரின் உரிமைகள் உறுதிசெய்யப்படாது என்பதை அரசுத் தலைவர்கள் சிங்கள மக்களுக்கும் பௌத்த பேரினவாதிகளுக்கும் வழங்கும் உறுதிமொழிகளும், அண்மையில் வெளிவந்த இடைக்கால வரைபு அறிக்கையும் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன.

இதுவரை நிகழ்ந்த சிறிலங்கா அரசியல் யாப்பு உருவாக்கங்கள் எவற்றிலும் தமிழ்த் தரப்பு பங்கேற்றதில்லை. உடன்படாத யாப்புச் சீர்திருத்தத்தைப் புறக்கணித்த வரலாற்றையும் தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள். இதுவரையான தமிழர் விரோத யாப்புக்கள் தமிழர்களின் ஆதரவின்றியே நிறைவேற்றப்பட்டன. இந்த வரலாற்றுச் சுவடுதான் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டையும் தேவையையும் உலகின்முன் வைக்கும் நேர்மையை எமது இனத்துக்குத் தந்திருக்கிறது. தமிழினத்தின் இறைமையைச் சிங்கள தேசம் பறித்துக்கொண்டதேயன்றி, தமிழினம் தாமாகவே தாரைவார்த்துக் கொடுக்கவில்லை. இந்த வரலாற்று நியதியை இதுவரையான தமிழர்களின் யாப்புப் புறக்கணிப்பே தக்கவைத்திருக்கின்றது.

ஆதலால், தமிழர் விரோதப் போக்கைப் பேணியபடியே தனது சிங்களப் பௌத்த பேரினவாதச் சிந்தனையை வலுப்படுத்தும் நோக்கோடு வரையப்படும் இந்த அரசியல் யாப்பு விடயத்திலும் தமிழினம் தனது தீர்ப்பைச் சரியாக வழங்குமென்று நம்புகின்றோம். மக்களுக்காக மரணித்த ஆயிரமாயிரம் மாவீரச்செல்வங்களின் அர்ப்பணிப்புக்களை எமது மக்கள் ஒருபோதும் வீணாகிப்போக விடமாட்டார்கள்.

அன்பான புலம்பெயர்ந்த உறவுகளே,

இன்று உலக அரசியல் ஒழுங்கில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. ஒருபுறம் கடும்போக்குவாத, பழமைவாத சக்திகளும் சித்தாந்தங்களும் அரசியல் வெற்றியைப் பெற்றுவருகின்றன போன்ற தோற்றம் நிலவுகின்றது. அதேவேளை, மறுபுறத்தில் முற்போக்குவாத சக்திகளும் அரசியல் எழுச்சியைப் பெற்றுவருகின்ற நிலைமையை மேற்குலகில் பார்க்கின்றோம். உலக ஏதிலிகள் சிக்கல், மனித அவலங்கள், பொருளாதாரச் சிக்கல், உலகமயமாதல் போன்றன அதிகளவுக்கு அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாகி விட்டன. அரசியலுக்காக உருவாக்கப்பட்ட, பொதுமைப்படுத்தப்பட்ட பயங்கரவாதச் சிக்கலின் உண்மை முகத்தை இன்று உலகநாடுகள் அறியத்தொடங்கியிருக்கின்றன. இந்தப் பொதுமைப்படுத்தலின் தவறை முற்றுமுழுதாக உலக நாடுகள் அறிந்துகொள்ளும்வேளை ஒருநாள் கைகூடிவரும். இந்தப் பயங்கரவாதப் பொதுமைப்படுத்திலின் விளைவாக வஞ்சிக்கப்பட்ட எமது இனவிடுதலைப் போராட்டத்தின் நியாயமும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒருநாள் வந்தே தீரும்.

உலகில் இன்றும் இனவிடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணம்தான் இருக்கின்றன. அவ்வப்போது புதிய தேசங்கள் பிறந்த வண்ணம்தான் உலகவரலாறு நகர்ந்துகொண்டிருக்கிறது. எத்தகைய இடர்கள் வந்தபோதும் போராட்டத்தைத் தக்கவைத்த இனங்கள், வரலாற்றில் கிடைத்த வாய்ப்புகளில் வெற்றியடைந்த வண்ணம் இருக்கின்றன. பலத்த எதிர்ப்புகளுக்கிடையிலும் தமக்கான இறைமை வேட்கையைப் பொதுவாக்கெடுப்பு மூலம் ஈரினங்கள் வெளிப்படுத்திய நிகழ்வுகள் மிக அண்மைய எடுத்துக்காட்டுகளாகும். தனித்தேசமாக அவர்கள் இன்னும் தமது இலக்கை அடையவில்லையாயினும் அவர்களின் போராட்டத்தில் இதுவொரு அசைக்க முடியா மைற்கல் என்பது திண்ணம். இந்நேரத்தில் ஈராக்கிய குர்திஸ் இனத்தாருக்கும், கற்றலோனிய மக்களுக்கும் அவர்களைப் போலவே இனவிடுதலைக்காக அயராது போராடுகின்ற தமிழினத்தின் சார்பில் நாம் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய காலத்தின் தேவைகருதி உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது விடுதலைப் போராட்டத்தைப் புதிய பரிமாணத்தில் விவேகமாக முன்னகர்த்திச் செல்லவேண்டிய வரலாற்றுப் பணி எமக்குள்ளது.

எத்தனையோ இடர்களுக்கிடையிலும், அடக்குமுறைகளுக்கிடையிலும் எமது மக்கள் தாயகத்தில் தமது உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து வருகிறார்கள். காணி அபகரிப்பு, அரசியற் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான போராட்டங்கள் உட்பட பல தளங்களில் போராடி வருகிறார்கள். இவர்களின் போராட்டங்களையும் தமிழின அழிப்புக்கு நீதிவேண்டி அனைத்துலக விசாரணைக் கோரிக்கையையும் உலகமட்டத்தில் எடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்பும் சர்வதேச ஆதரவைத் திரட்டும் கடமையும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தையே சாரும். குறிப்பாக, தமிழ் இளையோரின் அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பு மிகமிக அவசியமாகும்.

எமது இயக்கம் மீதான தடையும் எம்மைப் பயங்கரவாதிகளாக நோக்கும் மனப்பாங்கும் தமிழரின் உரிமைப் போராட்டத்தை மட்டுமன்றி, ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் ஆழமாகப் பாதித்து வருகின்றன. இந்த நீதிக்குப் புறம்பான தடையை, எமது மக்களை அழிப்பதற்காக மட்டுமே சிங்கள இனவாத அரசு பயன்படுத்துகிறது என்பதைப் பன்னாட்டுச் சமூகம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தடையால் இலட்சக்கணக்கான எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டது மட்டுமன்றி, போர் முடிவடைந்தபோதும் எமது ஆதரவாளர்களும் நீதிக்காக உழைத்துவருபவர்களும் அரசியல் பழிவாங்கலுக்கும் இலக்காகி வருகிறார்கள்.

எமது இயக்கம் மீதான தடையானது உலக நாடுகளில் எமது இயக்கத்தின் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்குப் பெரும் இடையூறாக இருந்து வருகின்றது. எமது இயக்கமானது சட்டபூர்வமாக இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தருவதனூடாகவே எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்தும் அரசியல் வழியில் முன்னெடுக்க உதவ முடியும். அத்தோடு இலங்கைத்தீவு தொடர்பில் ஒரு வலுச்சமநிலையைப் பேணவும் முடியுமென்ற வரலாற்று நியதியையும் உலகம் விளங்கிக் கொள்ள வேண்டுமென்று இந்நேரத்தில் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்பான தமிழக உறவுகளே!

தமிழ்த்தேசியம், தமிழ்மொழிக் காப்பு, சமூகநீதிக்கான போராட்டம், அடக்குமுறை எதிர்ப்பு என்பவற்றில் ஆழமான வரலாற்றைக் கொண்டிருப்பவர்கள் நீங்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப்போராட்டக் குழந்தையைத் தொட்டிலாட்டி வளர்த்துவிட்ட காலத்திலிருந்து இன்றுவரை எமது மக்களின் உரிமைப்போராட்டத்துக்கான உந்துசக்தியாக என்றும் இருந்து வந்திருக்கிறீர்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான உலகஆதரவின் திறவுகோல் நீங்கள்தாம் என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் உங்களது அயராத உழைப்பும் ஆதரவும் எமக்கு வேண்டுமென்பதை இந்நேரத்தில் மீளவும் பதிவு செய்ய விளைகின்றோம்.

அன்பான தமிழ்பேசும் மக்களே,

உலக வரலாறு என்றும் உருண்டுகொண்டே இருப்பதுதான். இந்த வரலாற்றில் எண்ணற்ற அழிவுகளும், மீட்சிகளும், எழுச்சிகளும் ஒவ்வோர் இனத்திலும் நிகழ்ந்தவண்ணமே கழிந்திருக்கின்றன. தமது எழுச்சிக்கானதும், மீட்சிக்கானதுமான போராட்டத்தைத் தொடர்ந்து தக்கவைத்திருந்த இனங்கள் வெற்றியடைந்திருக்கின்றன.

இந்த வரலாற்று நியதிக்கமைய எங்கள் போராட்டமும் வெற்றிபெறும் நாளொன்று கனிந்துவரும். அதுவரை நாம் தொடர்ந்து போராடுவோம். தமக்கென்று எதையும் எதிர்பாராது, மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்த எங்கள் மாவீரச்செல்வங்களின் உயர்ந்த தியாகம் என்றும் வீண் போகாது. சத்திய வேள்வியில் ஆகுதியாகிய இந்த உத்தமர்களை நினைவுகொள்ளும் இந்நாளில், விடுதலை பெறும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம் என உறுதியெடுத்துக் கொள்வோமாக.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் பெய்யும் மழை



கொழும்பு, நவ.28

நாட்டின் அனைத்து பகுதிகளி லும் இன்று மாலை வேளையில் இடி யுடன் கூடிய மழை பெய்யும் என, வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு , மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 75 மில்லி மீற்றர் மழை பெய்யக்கூடும்.

சிலவேளை மணித்தியாலத்துக்கு 70 அல்லது 80 கிலோ மீற்றர் வேகத் தில் காற்று வீசுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் அந்நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் கரையோரப் பகுதிக ளில் கடல் கொந்தளிப்புடன் காணப் படலாம் எனவும் அந்த நிலையம் மேலும் எச்சரித்துள்ளது. (அ)

# இலங்கை அகதிகளைக் கலைக்கும் பிரிட்டன்

கொழும்பு,நவ.28

பிரிட்டனில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு மீள அழைப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

பிரிட்டனிலிருந்து தங்கியுள்ள அகதிக ளைச் சுயவிருப்புடன் வெளியேற்றும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக் கப்படும் எனப் பிரிட்டன் அரசாங் கம் அறிவித்துள்ளது.

பிரிட்டனின் உள்துறை செயலகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. இந்த நிலையில், பிரிட்டனில் தங்கி யுள்ள இலங்கை அகதிகளுக்கும், இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் தொடர் புகளை ஏற்படுத்தி அவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது. அகதிகள் சுய விருப்புடன் நாடு திரும்புவதை ஊக்குவிக் கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்படுவதாகப் பிரிட்டன் உள் துறைச் செயலகம் தெரிவித்துள்ளது. (அ)

# அந்த நாள் ஞாபகம்.....!




நியூசிலாந்தில் முதற்தடவையாக பெண்கள் வாக்களித்தனர்.

# விசாரணைகளைத் திசை திருப்ப இலஞ்சம் கொடுத்தாரா மகிந்த?

கொழும்பு, நவ.28

காணாமல் போனோர் தொடர்பான விசா ரணைகளை முன்னெடுத்த 3 வெளிநாட்டவர் களுக்கு 256 மில்லியன் ரூபாவை வழங்கிய விட யம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கப்பதற்காக நியமிக் கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் 3 வெளி நாட்டவர்கள் செயற்பட்டனர்.

குறித்த மூவரின் தங்குமிட செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக 256 மில்லியன் ரூபா இலங்கை மத்திய வங்கியினால் செலுத்தப்



பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று சுட் டிக்காட்டியுள்ளது.

2014-07-15 திகதியில் 1871/18 என்ற இலக்க வர்த்தமானியின் ஊடாகவே குறித்த மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். எவ்வித திரும்பச் செலுத்தல் அடிப்படைகளின்றி குறித்த மூவருக் கும் நிதி வழங்குவதற்கு அப்போதைய ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ச, மத்திய வங்கி ஆளுநரா கச் செயற்பட்ட அஜித் நிவாட் கப்ராலுக்கு உத்தரவிட்டுள்ளார். கடந்த ஆட்சியின் போது மத்திய வங்கியின் செயற்பாடு தொடர்பில், கணக்காய்வாளர் திணைக்களம் மேற்கொண்ட விசேட விசாரணைகளின் போதே இந்த விட யம் தெரியவந்துள்ளது. விசாரணைகளை அரசுக் குச் சார்பாக முடிக்கவே இந்தப் பணம் வழங் கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது. (அ)

# கத்திக் குத்தில் 2 மாணவர் காயம்

கொழும்பு,நவ.28

கொஸ்கட பிரதேசத்தில் பாட சாலையொன்றில் இடம்பெற்ற கத் திக் குத்துத் தாக்குதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்து பலபிட் டிய ஆதார மருத்துவமனையில் நேற்று திங்கட்கிழமை சேர்க்கப்பட் டுள்ளனர்.

இவ்வாறு காயமடைந்துள்ளவர் கள் அந்தப் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயின்று வந்த மாண வர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. நேற்றுக் காலை இரண்டு மாண வர்களுக்கும் இடையில் வாய்த்தக ராறு ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத் தில் முரண்பட்ட மாணவர்களில் ஒருவர் மற்றையவரின் வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார். இதன் போது மோதலைத் தடுக்கச் சென்ற இன்னொரு மாணவனின் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். கத்திக் குத் துத் தாக்குதலை மேற்கொண்ட மாண வனைக் கொஸ்கட பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (அ)

# இலங்கைக் கடற்பகுதி இன்னும் பெரிதாகும்

கொழும்பு,நவ.28

அடுத்த வருட இறுதிக்கு முன்னர், சர்வதேசக் கடற்பிராந் தியத்தில் இலங்கைக்கான கடற்பகுதி மேலும் விரிவு படுத்தப்படும் என்று அமைச் சர் மகிந்த அமரவீர நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.



"இது தொடர்பாக ஐக் கிய நாடுகள் சபையுடன் நடத் தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளது. குளங்களில் நீர்வாழ் உயிரி னங்களை அபிவிருத்தி செய் வதற்காக இம்முறை வரவு- செலவுத்திட்டத்தில் 25 மில் லியன் ரூபா ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் என்ற ரீதியில் ஐக் கிய நாடுகள் சபையின் அபி விருத்திப் பிரிவிடம் முன் வைத்த கோரிக்கைக்கு அமை வாக இதற்கான திட்டம் முன் னெடுக்கப்பட்டுள்ளது" என வும் அவர் தெரிவித்தார்.(அ)

# கிணற்றுக்குள் சிறுவன் மரணத்தில் சந்தேகம்

## மானிப்பாயில் பரபரப்பு



யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்ப்பாணம், மானிப்பாய் சங்கு வேலிப் பகுதியில் அமைந்துள்ள கிணற் றிலிருந்து சிறுவன் ஒருவர் சடலமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

3 வயதுடைய சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நீண்ட நேரமாக,சிறுவனைக் காணாமல் தேடிக் கொண்டிருந்த பெற்றோர் கிணற்றைப் பரிசோதித்த போது சிறுவன் கிணற்றுக் குள் சடலமாக மிதப்பதனைக் கண்டறிந் தனர். இந்த நிலையில்,பொலிஸாருக்கு அறிவித்ததன் பின்னர் சிறுவனின் சட லம் மீட்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த கிணற்றினைச் சுற்றி மூன்று அடிக்கு மதில் காணப்படுகின்ற நிலை யில் சிறுவன் தவறி விழுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை எனப் பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த சிறுவனின் சடலம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள நிலை யில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (அ)

# தொழிநுட்ப ஆசிரியர்களை பயிற்றுவிக்க நடவடிக்கை

கொழும்பு,நவ.28

தகவல் தொழில்நுட்பப்பாடத் தைப் போதிப்பதற்கான ஆசிரி யர்கள் பயிற்றுவிக்கப்படுவார் கள். இவ்வாறான ஆசிரியர்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத் தப்பட்டிருப்பதாக கல்வி அமைச் சர் அகிலவிராஜ் காரியவசம் நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்



பந்துல குணவர்த்தன வாய் மூலம் முன்வைத்த கேள்வி ஒன்றுக்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித் தார்.

"கொடுப்பனவை வழங்கும் போது சில சேவைகளில் பிரச் சினை ஏற்படக்கூடும். இது தொடர்பாகக் கவனம் செலுத்தி இந்த ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க முயற்சிப்போம்" என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரி வித்தார். (அ)

# பெண்களின் உழைப்பு இலங்கைக்கு முக்கியம்

கொழும்பு,நவ.28


சர்வதேச ரீதியிலும் இலங்கை என்ற ரீதியிலும் பெண்களின் உழைப்பு சக்தி மிகவும் முக்கியமானதென்று நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச் சர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமைதெரிவித்தார்.

"இலங்கையில் பெண்களுக்கான சந்தர்ப்பம் தற்போது அதிகரிக்கப்பட் டுள்ளது. இவர்களுக்கு அரசியலில் ஈடு படுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. உலகளா விய ரீதியிலும், இலங்கை என்ற ரீதி யிலும் பெண்களின் உழைப்பும் ஒத் துழைப்பும் மிகவும் முக்கியமானதா கும். மகளிர் படையணிச் சக்தி மிக வும் முக்கியமானதாகும். ஆகவே பெண் களுக்காகச் சிறந்த சேவையை மேற் கொள்ளக்கூடிய இடங்களை மேம்



படுத்த வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்தச் சட்டத்தின் மூலம் நாம் செயற்படவேண்டும்" என்று அமைச் சர் மேலும் தெரிவித்தார். (அ)

# பாலியல் விடுதி முற்றுகை!



கொழும்பு,நவ.28

கல்கிஸை - அத்திட்டிய பிர தேசத்தில் இயங்கிய பாலியல் தொழில் விடுதி ஒன்றைப் பொலி ஸார் நேற்றுத் திங்கட்கிழமை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு முகாமை யாளராகப் பணியாற்றிய பெண் ணையும் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெண் ணையும் கல்கிஸைப் பொலிஸார் கைது செய்தனர். மசாஜ் நிலை யம் என்ற பெயரில் இவர்கள் இந்தப் பாலியல் தொழில் விடு தியை நடத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந் துள்ளது. 21 மற்றும் 32 வயதுடைய பெண் களே அங்கு கைது செய்யப்பட்ட வர்களாவர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை இரத்து!

யாழ்ப்பாணம், நவ.28

இலங்கை கணக்காளர் சேவை 2017 பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சை மீண்டும் நடத்தப்படும். இலங்கை நிர்வாக சேவையின் ஒரு வினாப் பத்திரமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். (ச)

## மெய்க்காவலர் கொலை
## மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கின் மூன்று சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில், மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது சந்தேகநபர்கள் மூவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். 3 சந்தேகநபர்களையும் எதிர்வரும் டிசெம்பர் 11ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

## வடக்கின் 4 மாவட்டங்களில்
# தேர்தல் இல்லை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான முதற்கட்டத் தேர்தலில் வடக்கின் 4 மாவட்டங்களில் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மறுசீரமைப்பு தொடர்பான சர்ச்சை காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டத்துக்கான வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எல்லை மறுசீரமைப்பில் சர்ச்சைகள் காணப்படாத 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை முதற்கட்டமாக நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனினும் இதன் கீழ் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களின் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் மேற்குறித்த முதற்கட்டத் தேர்தல் நடைபெற மாட் டாது என்று அறியக் கிடைத்துள்ளது. (ச)

## பல்கலை. மாணவர்கள் படுகொலை:
# விசாரணை தள்ளி வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கவில்லை என குற்ற விசாரணைப் பிரிவினர் மன்றுக்கு அறிவித்தனர். இந்த நிலையிலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டியில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 20 ஆம் திகதி நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பொலிஸார் மீது கொலைக் குற்றம்சாட்டப்பட்டது. 5 பொலிஸார் கைதாகிப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச)

# ஒத்திவைக்க இடமளியோம்
## ரவி கருணாநாயக்க

கொழும்பு, நவ.28

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்து மக்களின் வாக்குரிமைப் பலத்தை தடுக்க எந்த சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வடக்குத் தொகுதியில் குறைந்த வருமானத்தை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

“கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கட்டியெழுப்பப்பட்ட நல்லாட்சியை மறுபக்கம் திருப்பி விட சிலர் காலைப் பிடித்து இழுத்தாலும் ஜனாதிபதியும், பிரதமரும் புரிந்துணர்வுடன் ஜனநாயகத்தை வலுப்படுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்கின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. இதனால், நீதிமன்றத்துக்குச் சென்றவர்கள் மீண்டும் நீதிமன்றத்துக்குச் சென்று மக்களின் வாக்குரிமைப் பலத்தை வலுப்படுத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு கோரிக்கை விடுக்கிறேன்” என்றார். (அ)

# தொடர்ச்சிகள்

## 29 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை ஆகியவற்றின் காணிகளும் அண்மித்த பகுதிகளுமே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது. (ச)

## முற்றியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு வளாகத்தின் விடுதியில் முதலாம் வருட மாணாவர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டிருந்தது. இந் நிலையில் குறித்த புகைப்படங்களை முகப்புத்தகத்தில் பதிவேற்றியதைத் தொடர்ந்து சிங்கள மாணவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

இதனையடுத்து தமக்கு பாதுகாப்பு தருமாறு வளாகத்தின் முதல்வரிடம் சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் தனித்தனியாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந் நிலையில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாடுகளைச் சமரசம் செய்வதற்கும், விசாரணைகளை நடத்துவதற்கும் ஏதுவாக வாளகத்தை காலவரையறையின்றி மூட வளாகத்தின் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இத்தகவலை அனைத்து மாணவர்களும் அறிந்துகொள்ளும் விதமாக வாளாகத்தின் அனைத்து பீடங்களிலும் குறித்த அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## மாவீரர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபங்களை ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

நேற்றைய நாளில் மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மணி ஓசை எழுப்பப்பட்டது. முதல் மாவீரர் மரணமான 6.05 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லப் பாடலுடன் தீபங்கள் ஏற்றப்பட்டன. பொதுச் சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றியதைத் தொடர்ந்து ஏனையோர் தீபங்களை ஏற்றி அஞ்சலிகளை செலுத்தினர்.

அஞ்சலிக்காக ஏற்றப்பட்ட தீப ஒளி பரவ மாவீரர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது சோகத்தை வெளிப்படுத்தினர். உறவுகளின் கதறலால் தமிழர் தாயகமே சோகமயமானது.

முன்னதாக யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் பகுதியிலும் சில அரசியல்வாதிகள், பொதுமக்கள் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதேபோன்று இம்முறை வீடுகளிலும் பலர் 6.05 மணிக்கு தீபங்கள் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலிகளை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ். மாவட்டத்தில் உடுத்துறை, சாட்டி துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. வடமராட்சி எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக தீருவில் குமரப்பா - புலேந்திரன் நினைவு சதுக்கத்தில் மாவீரர் நாள் நிகழ்வு இடம் பெற்றது. மாவீர்களை ஈந்த பெற்றோர் பொதுச் சுடரை ஏற்றினர்.

இதேபோன்று இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாகவும் மக்கள் கூடி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். துயிலும் இல்லத்துக்கு செல்ல முடியாதபடி வாகனங்களை நிறுத்தியிருந்த இராணுவம் அவற்றின் மீதிருந்து நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களை வீடியோக்கள் எடுத்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான புலனாய்வாளர்கள் மக்களைக் கண்காணித்தவாறு நின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அண்மையாக விசேடமாக ஒழுங்கமைப்பட்ட இடத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**பல்கலைக்கழகங்களில்**

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களிலும் வவுனியா, திருகோணமலை வளாகங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. இரு இடங்களிலும் நேற்றுப் பகல் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. எழுச்சிப் பாடல்களை ஒலிக்கவிட்டு மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் கூடி மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

யாழ். பல்கலைக்கழத்தில் நேற்று மாலை 6.05 மணிக்கு தீபங்கள் ஏற்றப்பட்டு மாவீரர்களை மாணவர்கள் நினைவேந்தினர்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லத்தில் 3000 மாவீரர்களுக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் 3 மாவீரர்களின் தாய் பொதுச் சுடரை ஏற்றி வைத்தார். முழங்காவில் துயிலும் இல்லத்திலும் பெருமளவான மக்கள் கூடி தமக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

**முல்லைத்தீவில்**

இறுதிப் போர் நடந்த முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாவீரர் நினைவேந்தல்கள் இடம்பெற்றன. முள்ளியவளை, இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், தேராவில் அலம்பில், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், இறுதிப் போரின்போது மாவீரர்கள் விதைக்கப்பட்ட இடங்களிலும் தீபங்கள் ஏற்றி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

**32 துயிலும் இல்லங்கள்**

இதேபோன்று மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர். நேற்றையதினம் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 32 மாவீரர் துயிலும் இல்லங்களில் - சில இடங்களில் அவற்றுக்கு முன்பாக மாவீரர் நினைவுநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேபோன்று புலம்பெயர் தேசங்களான பிரான்ஸ், கனடா, பிரிட்டன், நோர்வே, ஜேர்மனி எனப் பல நாடுகளில் மாவீரர்களுக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. (ச)

## கனகபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. பிரதமர் வசமுள்ள, அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சே, கிளிநொச்சி பிரதேச சபை மூலம் முன்னெடுக்கப்படும், மாவீரர் துயிலுமில்ல புனரமைப்பு பணிகளை நிறுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கனகபுரம் துயிலுமில்லத்தின் சுற்றுச் சுவரை அமைப்பதற்கு, 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் துயிலுமில்லங்களை தாவரவியல் பூங்காக்களாக பராமரிப்பதற்கும், இந்த நிதி ஒதுக்கீட்டுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, மாவீரர் துயிலுமில்லங்களை புனரமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார். பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், துயிலுமில்லப் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அந்தப் பணிகள் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதற்காகச் செய்யப்படுகின்றது எனக் கேட்டு விசாரித்தனர்.

மாவீரர் நாளுக்காக இரத்ததானம் செய்தால் அதனைப் பெற வேண்டாம் என எச்சரித்துச் சென்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## குட்டித் தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளதன் அடிப்படையில் 203 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் தடைபட்டுள்ளன.

இந்த நிலையிலேயே 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மாத்திரம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இது தொடர்பில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவிக்கையில், தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தைச் செலுத்த வேண்டும். அத்துடன், சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் 5,000 ரூபாவையும், அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த வேட்பாளர்கள் 1,500 ரூபாவையும் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாக்பூரில் இந்தியாவிடம் மண்டியிட்டது இலங்கை



நாக்பூர், நவ. 27

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை - இந்திய அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் கடந்த 24ஆம் திகதி ஆரம்பித்தது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களையும், இந்திய அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 610 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில், ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இந்திய அணியின் இந்த மிகப் பெரிய இலக்குக்கு, கோஹ்லியின் இரட்டைச்சதத்துடன், முரளி விஜய் (128), புஜாரா (143), ரோகித் சர்மா (102) ஆகியோரின் சதங்களும் கைகொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 405 ஓட்டங்கள் பின்னிலையுடன், நேற்று முன்தினம் மாலை தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, அன்றை தினம் ஆட்ட நேரம் முடியும்போது, ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி, நேற்று மதியம் 166 ஓட்டங்களுள் சுருண்டது.

இதன்மூலம் இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட தொடரில் இந்திய அணி, 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி தொடங்கவுள்ளது. (ஐ)



# மெல்பேர்ண் டெஸ்டில் ஆஸி. அசத்தல்

பிரிஸ்பேர்ண், நவ. 27

பிரிஸ்பேர்னில் நடைபெற்று வந்த இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டியின் இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து அணி 302, ஆஸ்திரேலியா 328 ஓட்டங்களையும் சேர்த்தது.

இதனையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியப் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் நேற்றுமுன்தினம் 195 ஓட்டங்களுள் சுரண்டது.

பின்னர் 170 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் நேற்று முன்தினம் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, அன்றைய ஆட்டம் முடியும் போது விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் நேற்றுத் தனது எஞ்சிய ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, விக்கெட் இழப்பின்றி 173 ஓட்டங்களைச் சேர்த்து 10 விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

அந்த அணியின், பான்குரோட் (82), வோர்ணர் (87) ஆகியோர் சிறப்பாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய அணியின் தலைவரான ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# சிரியாவில் வான் தாக்குதல் 23 பேர் சாவு!

சிரியா, நவ.28

சிரியாவில் அரச கூட்டுப்படைகள் மேற்கொண்ட தொடர்வான் தாக்குதலில் 23 பொது மக்கள் பலியாகினர்.

சிரியாவின் கிழக்கு கோஹ்ட்டா பிரதேசத்தில் பதுங்கியிருக்கும் ஐ.எஸ் தீவிரவாதிகள் நிலைகளைக் குறிவைத்து, சிரிய அரச படைகளின் சார்பில் ரஷ்யா இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. மரணமடைந்தவர்களில் 4 பேர் சிறுவர்கள் என ஐக்கிய இராச்சியத்தை மையமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பொன்று குறிப்பிட்டுள்ளது. கொஹ்ட்டா பகுதியில் உள்ள தீவிரவாதிகளை வெளியேற்றும் நோக்கில் சிரிய இராணுவம் அழுத்தமான முன்நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட வான்வழி மற்றும் பிற தாக்குதல்கள் காரணமாக நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குமுறுகிறது 'ஆகங்': மக்களுக்கு எச்சரிக்கை

ஜகார்த்தா, நவ.28

இந்தோனேசியாவின் பாலி தீவில் உள்ள எரிமலையானது புகையைக் கக்கத் தொடங்கியிருப்பதால், 10 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் மக்களை வெளியேறும்படி நேற்று திங்கட்கிழமை உத்தரவிடப்பட்டது.

இந்தோனேசியா, தீவுக் கூட்டங்கள் அடங்கிய நாடு. இங்கு பல தீவுகளில் எரிமலைகள் உள்ளன. இங்குள்ள பாலித் தீவிலுள்ள 'ஆகங்' என்ற எரிமலை கடந்த 22 ஆம் திகதி வெடிக்கத் தொடங்கியது. அதிலிருந்து கரும்புகை வெளியேறி 2300



அடி உயரத்துக்கு எழுந்தது. இதனால் எப்போது வேண்டுமானாலும் இந்த எரிமலை வெடித்து சிதறும் நிலையுள்ளது.

எனவே அதன் அருகே தங்கியிருக்கும் கிராம மக்களை வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான மக்கள், குடும்பம் மற்றும் கால்நடையாக வெளியேறினர்.

இந்த நிலையில், எரிமலையின் பாதிப்புக் குறித்து நேற்று 4ஆவது எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அருகில் உள்ள விமான நிலையம் மூடப்பட்டு, விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. எரிமலை வெடித்துச் சிதறும் போது, பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# "நான் ஜெயலலிதாவின் மகள்" நீதிமன்றில் வழக்கு





புதுடில்லி, நவ.28

ஜெயலலிதாவின் மகள் என உரிமை கோரி பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்ற பெண் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாரிசுகள் என அவரது அண்ணன் மகள் ஜெ தீபா மற்றும் அண்ணன் மகன் தீபக் ஆகியோர் உரிமை கொண்டாடி வருகின்றனர். இதேபோல் கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த மஞ்சுளா என்கிற அம்ருதாவும் ஜெயலலிதாவின் மகள் என உரிமை கோரியுள்ளார்.

ஜெயலலிதா தன் சொந்தத் தாய் எனக் கூறிப் பரபரப்பை ஏற்படுத்திய அம்ருதா, இதுகுறித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், ஜெயலலிதாவின் மகள் எனத் தன்னை அறிவிக்க வேண்டும் என்றும், அவர் என் தாய்தான் என்பதை நிரூபிக்க டி.என்.ஏ பரிசோதனை செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

'1980ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி ஜெயலலிதாவின் மகளாகப் பிறந்தேன். என் வளர்ப்புத் தாய் சைலஜா 2015 இல் இறந்துவிட்டார். வளர்ப்பு தந்தை சாரதி இந்த ஆண்டு மார்ச் 20ஆம் திகதி இறந்துவிட்டார். ஜெயலலிதாவுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் என்பதால் இந்த உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, ஜெயலலிதா தான் என் தாய் என்பதை நிரூபிக்க, மெரீனாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவரது உடலைத் தோண்டி எடுத்து டி.என். ஏ பரிசோதனை நடத்த உத்தரவிட வேண்டும்.

வைஷ்ணவ ஐயங்கார் பிராமண முறைப்படி ஜெயலலிதாவுக்கு இறுதிச் சடங்கு நடத்தப்பட வேண்டும்' எனவும் அம்ருதா கூறியுள்ளார். அம்ருதாவின் கோரிக்கை குறித்து உச்ச நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை விசாரணை நடத்தியது. நீதிபதி (மதன் பி லோகூர்) தலைமையிலான அமர்வு இந்த மனுவை ஆய்வு செய்தது.

# 26 வருடங்களின் பின் இணையும் ரஜினி–மம்முட்டி



சென்னை, நவ.28

மணிரத்னம் இயக்கத்தில் 'தளபதி' படத்தில் இணைந்து நடித்த ரஜினியும், மம்முட்டியும் 26 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இணையவிருக்கின்றனர்.

1991ஆம் ஆண்டு ரஜினியும், மம்முட்டியும் நடித்த 'தளபதி' படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. மணிரத்னம் இயக்கத்தில் நட்பை மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்தத் திரைப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

அதன்பிறகு அவர்கள் எந்தப் படத்திலும் சேர்ந்து நடிக்கவில்லை. 26 வருடங்களுக்கு பிறகு இப்போது ஒரு மராத்தி படத்தில் இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். இந்தப் படத்தை தீபக் பாவேஷ் இயக்குகிறார். அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இதன் படப்பிடிப்புத் தொடங்குகிறது. இந்தப் படத்திற்கு 'பஷாயதன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

நியூயோர்க், நவ.28

நியூயோர்க்கில் உள்ள மாலில் மர்ம நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் (ஹாடசன் வல்லி) பகுதியில் உள்ள மாலில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். மாலில் பொது மக்கள் கூடியிருந்த வேளையில், துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நிகழ்ந்ததாகவும், உடனடியாக இது குறித்துப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதால், மாலிற்கு விரைந்து வந்த பொலிஸார், பொதுமக்கள் அனைவரையும் அவசர அவசரமாக வெளியேற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் குறித்து எந்த ஒரு தகவலும் வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் நனைந்த தாயகம்


யாழ். பல்கலைக்கழகம்




கிழக்குப் பல்கலைக்கழகம்




கோப்பாய்


நல்லூர்




விசுவமடு தேராவில்




உடுத்துறை




இரணைப்பாலை


ஓவியர் புகழேந்தி வீடு (இந்தியா)


கனகபுரம்

படங்கள்: 26,55,11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 28.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.